# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, மே மாதம் 22 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 12.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.(கூட்டி) 27/2004*

### இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

*"இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட கழகம் எப்பல்வேறு குறிக்கோள்க ளுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல் வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றி கரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாத லாலும் கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :$*

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதியின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத் தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்த கையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலவச பாலர்

பாடசாலை அத்துடன் நலன்புரி தொகுதி" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப் பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) சுயதொழில் திட்டங்களை, ஊக்குவித்தல், அவற்றிற்கு உதவியளித்தல் அத்துடன்அறிவுரை வழங்கல் ;

(ஆ) அரசியலமைப்பின் 9 ஆம் அட்டவணையில் நிரல் 1 இன் III ஆம் இணைப்பில் வரிசைப்படுத்தப்பட்டதேசிய பாடசாலைகள் தவிர்ந்த கல்வி துணையுறுப்புக்கள் மற்றும் நூலக வசதிகளைக் கொண்ட, தேவையான பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் நிறுவி பிள்ளைகளுக்கும், முதியோருக்கும் உதவுதல் ;

(இ) உறுப்பினர்களினதும், உறுப்பினர்களல்லாதோரின தும் ஆர்வத்தையும், திறமையையும் அபிவிருத்தி செய்வ தற்காக கலை, இலக்கியம், படிமங்களின் நிர்மாணம், மாதிரிகைச் செயலாற்றுகை, தொலைக்காட்சி நாடகங்க ளினதும், திரைப்படங்களினதும், மேடை நாடகங்களி னதும் தயாரிப்பு என்பவற்றை ஊக்குவிப்பதற்கு அவ சியமான நிதியுதவி வழங்குதல் ;

(ஈ) மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையையும் நல்லெண்ணத் தையும் வளர்ப்பதற்காக தேசிய மற்றும் சமய விழாக்களையும், சிரமதானப் பணிகளையும் ஒழுங்கு செய்தல் ;

(உ) அனுபவத்தையும், தொழில்நுட்ப அறிவையும் பரிமாறிக் கொள்வதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச உறவுகளை அபிவிருத்தி செய்தலும் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்த லும் ;

(ஊ) தகவல்களை ஆய்வு செய்தல், திரட்டுதல் ஆகிய நோக்கத்துக்காக பொருளாதார மற்றும் மனித வளங்களைத் திரட்டுதல் ;

(எ) ஊனமுற்ற ஆட்களுக்குப் பராமரிப்பளித்தலும், வயோதிபர்களுக்கு விடுதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஏ) சுற்றாடலைப் பாதுகாத்தலும், சேதன கமத்தொழிலின் நவீன நுட்பங்களை மேம்படுத்தலும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்கும், முன்னேற்றுவதற்கும் விரும்பத்தக்கவை என அது கருதக்கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்திப் பத்திரிகைகள் அத்துடன் சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிடுதலும், வெளியிடு தலும், விநி யோகித்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும், 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கும் அமைய தலைவரையும் கூட்டுத்தாப னத்தின் விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தெரிவு செய்யப்பட்ட வேறு ஆறு பதவிதாங்குநர்களையும் கொண்ட முகாமைச் சபையால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று தொகுதியின் உறுப்பினராகப் பதவி தாங்கும் முகாமைச் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறி ருப்பினும் தொகுதியின் தாபகத் தலைவர் வண. பானகல குணரத்தன தேரர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவராதல் வேண்டும் என்பதுடன் மேலுமொரு பதவிக்காலத்திற்கு மீள நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

உறுப்பினர்களினதும், கட்டணங்களினதும் பதிவேடு.

**5**. (1) முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று நிறுவனத்தின் உறுப்பினராக உள்ளவரும் இதன் பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக முறையாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவருமான ஒவ்வொரு ஆளினதும் பெயர்கள் சேர்க்கப்படவேண்டிய உறுப்பினர் பதிவேடொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும்.

(2) எந்த உறுப்பினரின் பெயர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்படும் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதோ அந்த உறுப்பினர் ஒவ்வொருவரும் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய ஆண்டு உறுப்பாண்மைக் கட்டணத் தொகையொன்றைச் செலுத்துமாறு தேவைப்படுத்தல் வேண்டும்.

உறுப்பாண்மையை இல்லாதொழிதல்.

**6**. உறுப்பினர் ஒருவர் பின்வரும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தினால் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் வேண்டும் : $

(i) உறுப்பினரின் இறப்பு ;

(ii) நிரந்தரமாக இலங்கையை விட்டுச் செல்லல் ;

(iii) உறுப்பாண்மையிலிருந்து விலகுதல் ;

(iv) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளில் பங்குபற்றுவதினின்று உறுப்பினர் ஒருவரைத் தடை செய்யும் உள அல்லது உடல் ரீதியிலான சீரற்ற தன்மை ;

(v) உறுப்பினர்களுக்கான ஒழுக்காற்று விதிகளுக்கெதிராக செயலாற்றுதல் ;

(vi) உறுப்பாண்மைக் கட்டணத்தின் அடுத்தடுத்த கொடுப்பனவில் இரண்டு ஆண்டுகளுக்குத் தவணை தவறுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**7**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, $

(அ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான காணிகளை அல்லது கட்டி

டங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கெடுத்தல், நிர்மாணித்தல் மற்றும் வேறு வகையில் பெறுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக முகாமை அங்கீகாரத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து (வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு) பணங்களைக் கடனாகப் பெற்றுக் கொள்ளல் அல்லது திரட்டுதல் ;

(இ) நாணயமாற்றுண்டியல், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றும் சாதனங்கள் ஆகியவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், மாற்றுதல், கொள்வனை செய்தல், விற்பனை செய்தல், வழங்குதல் அத்துடன் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற் படுத்தல், மூடுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை குழு உகந்த தெனக் கருதும் ஒரு முறையில் முதலீடு செய்தல் ;

(உ) எல்லாவிதமான சந்தாப்பணங்கள், ஒப்பப்பணங்கள், கொடைகள், நன்கொடைகள் அத்துடன் அன்பளிப்பு கள் ஆகியவற்றை பரிந்துகேட்டலும், பெறுதலும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுக்களுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்தல் ;

(எ) ஏதேனும் ஆதனத்தைப் பாதிக்கும் எவையேனும் சட்ட பூர்வமான நம்பிக்கைப் பொறுப்புக்களையும், நிபந்தனை களையும் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளல், நிறை வேற்றுதல் அத்துடன் நிருவகித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர் களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்கம் செய்தலும் அவர்களின் சேவைகளை முடிவு

றுத்துதலும், அத்துடன் அவர்களுக்குக் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் செலுத்துதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஊழியரைப் பயிற்றுவித்தல் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்,

ஆகியவற்றுக்கு கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :$

(அ) உறுப்பாண்மையை வகுத்தலும், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்கள் பதவி விலகுதல் ;

(ஆ) முகாமைக்குழு உறுப்பினர்களின் தெரிவு, பதவி தாங்குநர்களாக பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படுதல் குழுவின் நீக்குதல் அத்துடன் முகாமைச் சபையின் தத்துவங்கள், நடத்தை மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும், முகவர்களினதும், சேவையாளர்களினதும் நியமனம், தத்துவங்கள், கடமைகள், பணிகள் ;

(ஈ) முகாமைக் குழுவின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை, கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதல், வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல் அவற்றிற்கான கூட்டநடப்பெண் மற்றும் கூட்டங்களில் கருமங்களை ஆற்றுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக் குழுவுக்கான உறுப்பினர்களின் தகைமைகளும், தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக் கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இப்பிரிவின் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், நன்கொடைகள், ஒப்படப்பணங்கள் என்ற வகையில் கூட்டுத்தாப னத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட உதவு தொகைகள், யாவும் முகாமைக் குழு அங்கீகரிக்கும் வங்கியில் அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் கணக்கிற்கென கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், கடமைகளைப் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கு தேவைப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வுகளும்.*

**10.** (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(ஈ) இப்பிரிவின் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது,$

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

தொகுதியாலும் தொதிக்கும் செலுத்தப்பட வேண்டிய தனிசுகள் முதலியன கூட்டுத்தாபனத்தாலும், கூட்டுத்தாபனத்திற்கும் செலுத்தப் படற்பாலதாதல் வேண்டும்.

**11.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற தொகுதியின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று தொகுதிக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அதற்கு வருமதியானவையும் செலுத்தப்படற்பாலனவுமான ஒப்பப் பணங்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தன்மையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்ளையுடையதும் அல்லது உடையனவும் ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது எவையேனும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அத்தகைய நிறுவனத்தை அல்லது நிறுவனங்களை கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது கலைக்கப்படுவதற்கு முன்னர் தீர்மானித்தல் வேண்டும்.

*கலைத்தலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவர், செயலாளர், அத்துடன் கூட்டுத்தாபனத்தால் முறையாக அங்கீகாரமளிக்கப்பட்ட ஒரு உறுப்பினர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள்சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்